# அமர் சேவா சங்கம், ஆய்க்குடி
# தலைவர் அறிக்கை

# 2020-2021

பேரன்புடையீர்.

நமஸ்காரம்.   வாழ்க வளமுடன், வாழ்க வையகம்.

1993 ஜூலை 24 அன்று, அமர் சேவா சங்கத்திற்கு வருகை தந்து, சுவாமி சிவானந்தா பிளாக்-ஐ திறந்து வைத்து, சங்கம் தனித்துவத்தோடு செயல்பட தீர்க்க தரிசனத்துடன் ஆசி வழங்கிய நமது முதல் Patron-in-Chief பாரத ரத்னா Dr.C.சுப்ரமணியம் அவர்கள், 1993ம் ஆண்டு செப்டம்பர் மாத Bhavan's Journal இதழில் "Human Wonder" என சங்கத்தைப் பாராட்டியதைப் போற்றி நினைவு கூர்வோமாக.

நமது Patron-in-Chief Dr.M.S.சுவாமிநாதன் அவர்கள் மற்றும் நமது Patron திரு.N.வாகுல் அவர்களை செயலர் S.சங்கரராமனும் அடியேனும் அவ்வப்போது சந்தித்து நமது செயல்பாடுகள் மற்றும் வளர்ச்சி குறித்து தெரிவித்து வருகிறோம்.

24-01-2019 அன்று இறைவனடி சேர்ந்த நமது முன்னாள் Patron Late.SV.மோனி அவர்கள் சங்கத்திற்கு வழங்கிய அறிவுரைகளையும், தொண்டினையும், நிதியுதவியையும் இந்நேரத்தில் நினைவு கூர்வோமாக.

திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து தென்காசி தனி மாவட்டமாக 22-11-2019 அன்று அறிவிக்கப்பட்டதையும்  திரு.G.K.அருண்சுந்தர் தாயாளன் IAS அவர்கள் முதல் மாவட்ட ஆட்சியராகப் பொறுப்பேற்றுக்கொண்டதையும் 14-01-2020 அன்று அவர் சங்கத்திற்கு விஜயம் செய்து சங்கத்தின் கமிட்டி உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள், பல்வேறு துறை/பிரிவு தலைவர்கள் போன்றோருடன் கலந்துரையாடியதையும் நாம் நன்கு அறிவோம்.  தென்காசி, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாற்றம் தொடர்பாக தமிழக அரசின் அறிவிப்பு 12-ம் தேதி மாலை வெளிவந்தததையடுத்து 15-11-2020 அன்று தலைவர் எஸ்.ராமகிருஷ்ணன் அவர்கள் திரு.GK.அருண் சுந்தர் தாயளன் IAS அவர்களை நேரில் சந்தித்து நன்றி கூறி வழியனுப்பினார்.

12-11-2020 தென்காசி, திருநெல்நேலி மற்றும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரை Zoom-ல் அழைத்து 23 பிளாக்கில் பணிபுரிவதற்காக பயிற்சி அளிக்கப்பட்ட CRW, Spl.Educator, Speech Trainer மற்றும் Physiotherapist 160 பேரை அறிமுகம் செய்யும் கூட்டம் நடைபெற்றதையும் நாம் அறிவோம்.  15-11-2020 அன்று தென்காசியில் புதிய மாவட்ட ஆட்சித்தலைவராக பொறுப்பேற்ற டாக்டர்.G.S.சமீரன் IAS அவர்கள் 12-12-2020 அன்று சங்கத்திற்கு விஜயம் செய்து நமது EI Project புத்துணர்ச்சி பெறுவதற்கு பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். அமர் சேவா சங்கத்தை உள்ளடக்கி 21 நபர்கள் கொண்ட கமிட்டியை உருவாக்கி எல்லா துறையையும் ஒருங்கிணைத்து அதன்மூலம் தென்காசி மாவட்ட தலைமை மருத்துவமனையில் 0-18 வயதிற்குட்பட்ட மாற்றுத்திறனாளிகள் பயனடையும் பொருட்டு Dist. Early Intervention Centre (DEIC Project) என்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு நடைபெற்றுவருகிறது. நமது EI-Coordinator Ms.V.நவமணி அவ்வப்பொழுது உரையாடி வந்தார்.

டாக்டர்.G.S.சமீரன் IAS அவர்கள் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவராகப் பொறுப்பேற்பதற்கான தமிழக அரசு அறிவிப்பு 15-6-2021 அன்று வெளிவந்தது. அதனையடுத்து தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவராக 16-6-2021 அன்று திரு.கோபால் சுந்தர்ராஜ் IAS அவர்கள் பொறுப்பேற்று கொண்டார். தலைவர் திரு.எஸ்.ராமகிருஷ்ணன் புதிய மாவட்ட ஆட்சித்தலைவரையும், கண்காணிப்பாளராகப் பொறுப்பேற்ற திரு.கிருஷ்ணராஜ் IPS அவர்களையும் 15-8-2021 அன்று தென்காசி I.C.ஈஸ்வரன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற சுதந்திர தின கொடியேற்று விழாவில் கலந்துகொண்டு உரையாடி சங்கத்திற்கு அழைப்பு விடுத்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி பயன்பெறும் வண்ணம் பத்மா விருது பெற்ற சில அன்பர்களை Zoom-ல் அழைத்து அவரவர் தம் Project குறித்து 45 நிமிடங்கள் விளக்கம் அளிக்க Parlimentary Secretary 20-1-2021 அன்று வாய்ப்பு நல்கினார்கள். அமர் சேவா சங்கத்திற்கும் அந்த வாய்ப்பு கிடைத்ததையெண்ணி மகிழ்ச்சி கொள்வோமாக!. இந்நிகழ்வின் மற்ற NGO-களின் செயல்பாடுகள் குறித்து அறிந்துகொள்ள நமக்கும் வாய்ப்பாக அமைந்தது.

மாண்புமிகு தமிழக முதல்வராக திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 07-05-2021 அன்று பொறுப்பேற்று கொண்டதற்கும் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் துறை அமைச்சகத்தை தனது சொந்த பொறுப்பில் எடுத்துக்கொண்டு நல்ல பல திட்டங்களை அறிவித்து வருவதற்கும் அமர் சேவா சங்கம் சார்பில் பிரார்த்தனைகளையும், பாராட்டுகளையும், நன்றியினையும் தெரிவித்துக்கொள்வோமாக. அவர் பதவியேற்ற கையோடு மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர் மற்றும் அலுவலர்கள் முன்னிலையில் தமிழகத்தில் உள்ள சில NGO-களை நேரடியாகவும், Zoom-வழியாகவும் C-19 எதிர்கொள்வது தொடர்பாக விழிப்புணர்வு மற்றும் கருத்துக்கேட்புக்காக அழைப்பு விடுத்திருந்தார். அடியேனும், செயலரும் அதில் கலந்துகொண்டு கருத்துக்களை பகிர்ந்துகொண்டோம்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மாற்றுத்திறனாளிகள் அனைவரையும் சென்றடையும் வகையிலும், துறையின் நடவடிக்கைகளை வட்டார மற்றும் உள்ளூர் அளவில் விரிவுபடுத்தும் நோக்கத்திலும் ரூ.1702/- கோடி உலக வங்கி உதவியுடன் ‘ரைட்ஸ்’ திட்டம் நடைமுறைப்படுத்தபடும் என முதல்வர் சட்டசபை கூட்ட தொடரில் அறிவித்துள்ளது வரவேற்க்கதக்கதாகும். மேலும் நமது EI–திட்டத்திற்கு மார்ச் 2023வரையிலான காலத்திற்கு ரூ.9.30 கோடி அறிவித்ததும் மிக்க மகிழ்ச்சியான செய்தியாகும்.

மாநில மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் துறை 10 பக்க ‘World Bank Rights’ திட்ட அறிக்கையில் அமர் சேவா சங்கத்தின் Enabling Inclusion (m-VBRI app) பற்றி குறிப்பிட்டுள்ளது நமக்கு கிடைத்த அங்கீகாரம் ஆகும். ‘ரைட்ஸ்’ திட்டம் செயல்படுத்துவது குறித்து மாநில் மறுவாழ்வுத்துறை அவ்வப்போது ஏற்பாடு செய்யும் கலந்துரையாடும் கூட்டங்களில் நமது செயலரும், குழுவினரும் கலந்துக்கொண்டு ஆக்கப்பூர்வமான கருத்துக்களை தெரிவித்துவருகின்றன.

05-09-2021 அன்று EI Medical Camp தூத்துக்குடி மாவட்டம் மில்லர்புரம் St. Mary's Higher Secondary School-ல் வைத்து நடைபெற்றது. தூத்துக்குடி மாவட்ட DDAWO திரு.சிவசங்கரன் மற்றும் ஏழுபேர்க் கொண்ட மருத்துவ குழுவினர் கலந்துகொண்டனர். இவற்றில் 235 குழந்தைகள் பெற்றோருடன் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இதனைத் தொடர்ந்து 11-9-2021 அன்று திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை F.S Higher Secondary School-ல் வைத்து Medical Camp நடத்தப்பட்டது. திருநெல்வேலி மாவட்ட ஆட்சி தலைவர் திரு.V.விஷ்னு IAS, அவர்கள் திருநெல்வெலி பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஞானதிரவியம், DDAWO திரு.K.P.பிரம்ம நாயகம் ஆகியோர் இந்த முகாமை துவக்கி வைத்தார்கள். இவற்றில் 237 குழந்தைகள் பெற்றோருடன் கலந்து கொண்டு பயன்பெற்றனர். எட்டுபேர் மருத்துவக்குழுவின் அறிவுரை பெற்றோருக்கு பயனுள்ளதாகயிருந்தது.

தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மாவட்ட ஆட்சியர்களுடன் நமது தலைவர், செயலர் தொலைபேசி தொடர்பில் உள்ளனர். நமது EI குழுவின் ஒருங்கிணைப்பாளர் திரு.M.சங்கர் சகாயராஜ், Ms.V.நவமணி மற்றும் திரு.அரவிந்த பரத்வாஜ் அவ்வப்பொழுது நேரில் சந்தித்து நடப்புகளை எடுத்துரைக்கின்றன.

நமது EI Scale up Projcect-க்கு தமிழக அரசு மறுவாழ்வுத்துறை மூலம் அறிவிக்கப்பட்டுள்ள அமர் சேவா சங்கத்திற்கான மானியத் தொகை ரூ.2 கோடியே 36 லட்சத்திற்கான அரசு ஆணை 09-12-2019 கிடைக்கப்பெற்று 08-10-2020 அன்று MOU கையெழுத்தானது. இந்நிதியை ஒதுக்குவதற்கு பேருதவி புரிந்த தமிழக அரசு முன்னாள் தலைமை செயலாளர் திரு.K.சண்முகம் IAS அவர்கள், முன்னாள் மாற்றுத்திறனாளி நலத்துறை செயலாளர் திரு.C.விஜய்ராஜ்குமார் IAS அவர்கள் மாற்றுத்திறனாளி நலத்துறை ஆணையர் திரு.ஜான்டாம் வாக்கீஸ் IAS அவர்கள், நிதிதுறை செயலர் திரு.S.கிருஷ்ணன் IAS அவர்கள் திட்டக்குழு தலைவர் திருமதி.ஜெயஸ்ரீ ரகுநந்தன் IAS ஆகியோரின் பங்கு மகத்தானதாகும். தமிழக அரசின் மாண்புமிகு முன்னாள் முதலைமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி, மாண்புமிகு முன்னாள் துணை முதலமைச்சர் திரு.O.பன்னீர் செல்வம், மாண்புமிகு முன்னாள் சமூக நலத்துறை அமைச்சர் டாக்டர்.V.சரோஜா ஆகியோருக்கு இத்தருணத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

சர்வதேச Early Intervention மாநாடு சென்னை ஹோட்டல் ரியாத்தில் வைத்து 13, 14 மற்றும் 15 பிப்ரவரி 2020-ல் நடைபெற்றது. UNICEF மற்றும் WHO, Govt.of India, Govt.of Tamilnadu and GCC-உடன் இணைந்து நமது EI Project சம்பந்தமாக இம்மாநாடு நடத்தப்பட்டது.. 13-02-2020 அன்று Pre-Conference Workshop நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட தமிழக அரசின் முன்னாள் ஆளுநர் மேதகு திரு.பன்வாரிலால் புரோஹித் அவர்கள் சங்கத்தின் செயல்பாடுகளைப் பாராட்டி பேசியதோடு மட்டுமல்லாமல் தானாக முன்வந்து கவர்னர் நிதியிலிருந்து ரூ.51 லட்சம் சங்க சுற்றுசுவர் கட்ட நிதிஉதவி அளித்து நமக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தினார். C-19 காரணமாக சுற்றுசுவர் கட்டும் பணி காலதாமதமாக தொடங்கப்பட்டு இடையில் நிறுத்தப்பட்டு மீண்டும் தொடங்கப்பட்டு கட்டட பணி நடைபெற்று வருகிறது. நவம்பர் 2021-க்குள் பணி நிறைவு செய்யப்பட்டு டிசம்பர் 2021 மாதம் திறப்பு விழாவிற்கு தயாராகும் என எதிர்பார்ப்போமாக. எல்லம் அவன் செயல்!

முன்னாள் கவர்னர் மேதகு திரு.பன்வாரிலால் புரோஹித் அவர்களை சந்திப்பதற்கு திரு.T.V.சுப்ரமணியன் அவர்கள் பேருதவியாக இருந்ததோடு அவ்வப்போது ஆளுநர் மாளிகையில் அவரை சந்தித்து சங்கத்தின் முன்னேற்றங்களை தெரிவித்து வந்தார். காவேரி மருத்துவமனை டாக்டர்.S.அரவிந்தன், டாக்டர்.சிவராஜன் தாண்டிஸ்வரன் ஆகியோரும் கவர்னர் சந்திப்பு மற்றும் EI International Conference-க்கு பேருதவியாகயிருந்தனர். 10-9-2021 அன்று தமிழக அரசு ஆளுநர் பணியிலிருந்து விடைப்பெற்று பஞ்சாப் மாநில ஆளுநராக பொறுப்பேற்றுள்ளார். அவருக்கு மரியாதை கலந்த நன்றியையும், வாழ்த்துக்களையும், பிரார்த்தனைகளையும் தெரிவித்து கடிதம் அனுப்பபட்டுள்ளது. 18-9-2021 தமிழக ஆளுநராகப் பொறுப்பேற்றுள்ள R.N.ரவி IPS அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் வாழ்த்துக்கடிதம் அனுப்பப்பட்டு, சங்கத்திற்கு விஜயம் செய்ய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

உலகளவில் Covid-19 தொற்று நோய் பரவலால் பாதிப்பு ஏற்பட்டுள்ள இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் நமது நிறுவனத்திற்கு நிதி உதவி வழங்கிய நல்ல உள்ளம் படைத்த நன்கொடையாளர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம்.

C-19 பாதிப்பினால் விருந்தினர்கள், தன்னார்வத் தொண்டு புரியும் அன்பர்களை நமது விருந்தினர் மாளிகையில் தங்குவதற்கு அனுமதிக்க இயலாத சூழல் இருந்ததால் விருந்தினர்கள் தங்கவில்லை. இப்பொழுதுதான் தங்கவைத்து பார்க்கப்படுகிறது.

C-19 தொற்றால் 2020-ஆம் ஆண்டு முதல் அலையில் ஆய்க்குடியில் சுமார் 150 நபருக்கு பாதிப்பு ஏற்பட்டு 4 உயிரிழப்பு ஏற்பட்டது. நமது பஞ்சாயத்துக்குட்பட்ட பகுதிகளில் பாதிப்பு ஏற்பட்ட காலகட்டத்தில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட மருத்துவமனை, பேரூராட்சி நிர்வாகம், Quarantine முகாமில் பணியாற்றிய அன்பர்கள் ஆகியோர் சிறப்பாக பணிபுரிந்தது பாராட்டுக்குரியதாகும்.

2021-ஆம் ஆண்டு C-19 இரண்டாவது அலையின் தாக்கம் அதிகமாக இருந்தபோதிலும் இல்லக்குழந்தைகள், யுவதிகள், இளைஞர்கள், முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்ட பயனாளிகள் ஆகியோர் அனைவரையும் சங்கத்திலேயே தங்கி நல்லமுறையில் பாராமரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் C-19 பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சென்னை உதவும் உள்ளங்கள் தொண்டு நிறுவனத்தின் நிதியுதவியுடன் 15-6-2021 to 02-7-2021 வரை இரவு நேர சிற்றுண்டி இலவசமாக வழங்கப்பட்டது. திருமதி ரமணி சங்கரராமன் அவர்கள் இச்செயல்பாட்டில் முழு மூச்சுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டார்.

EI, TTS3, MTU, VBRI-D ஆகிய செயல்பாடுகள் REC hall-ல் வைத்து தற்காலிகமாக நடத்தப்பட்டது.

C-19 பற்றிய அமர் சேவா சங்கத்தின் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள் அனைவராலும் பாராட்டப்பட்டது. C-19 தொற்றால் போக்குவரத்து மற்றும் பலவற்றால் பாதிப்பு ஏற்பட்ட போதிலும் செயலர் அவர்களின் அறிவுரையின் பேரில் Tele-Rehab- VBRI above 6, below 6, Sangamam School செயல்பாடுகளிலும் Online Class SSV Primary, Hr.Sec. School –களிலும் நடைபெற்று வந்தன. தொற்று குறைய தொடங்கியதால் படிப்படியாக பழைய நிலைக்கு திரும்பி வருகிறோம்.

கிராமம் சார்ந்த மறுவாழ்வு செயல்பாட்டில் உள்ள மாற்றுத்திறன் படைத்த 1903 பயனாளிகளுக்கு Rs.1500 மதிப்புள்ள மளிகை சாமான், எண்ணெய், அரிசி உட்பட்ட Pack வழங்கப்பட்டன. இந்த வருடம் மாற்றுத்திறன் படைத்த நமது பணியாளர்களுக்கும் இவை வழங்கப்பட்டன. இதற்காக APPI Project-லிருந்து நமக்கு Rs.10 லட்சம் நன்கொடை வழங்கினார்கள்.

பாரத ரத்னா டாக்டர்.APJ.அப்துல்கலாம் அவர்களின் நெருங்கிய நண்பர் We Serve International Foundation மூலம் அமெரிக்கா டாக்டர்.M.S.விஜயராகவன், அவர்கள் நன்கொடையாக வழங்கிய 20,000 முககவசம் நம்முடைய 8 பிளாக்கில் உள்ள சுமார் 3000 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

நமது சிவசரஸ்வதி வித்யாலயா மேல்நிலைப் பள்ளியில் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் மாணாக்கர்கள் வருடந்தோறும் 100 விழுக்காடு தேர்ச்சி பெற்றுவருவது அனைவரும் அறிந்ததே. இந்த வருடம் கோவிட்-19 lockdown-னால் பள்ளி மாணாக்கர்களுக்கு LKG முதல் 12-வது வகுப்பு வரை ஆண்டு இறுதி தேர்வு நடத்த முடியாமல் ஆகிவிட்டது. எனவே தமிழக கல்வித் துறை அனைத்து மாணாக்கர்களையும் "அனைவரும் தேர்ச்சி என்ற அறிக்கை" அடிப்படையில் அடுத்த வகுப்பிற்கு உயர்த்த ஆணைப் பிறப்பித்தது. தற்போது தமிழக அரசின் அறிக்கை மற்றும் C-19 Protocol SOP-ன் படி 02-08-2021 அன்று பள்ளிகள் திறக்கப்பட்டு 9-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை உள்ள மாணாக்கர்களுக்கு பாடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

ISO- Internal and External Audit நடத்தப்பட்டு வருகிறது. இந்த வருடம் Virutual மூலமாக 26-08-2021 அன்று BSI External Audit நடத்தப்பட்டது.

அரசு விதிமுறையின் அடிப்படையில் கட்டட அங்கீகாரம் பணிகளில் தேக்கநிலையில் இருப்பது தெரியவருகிறது. Kulkarni, GIC, EI, Promose Unit, MTU additional, Fooster Care-பிளாக் போன்றவற்றிற்கு கட்டட வரைபடம், கட்டட அங்கீகாரம் இல்லாமல் இருக்கின்றது அதற்கான வேலைகளை முனைப்புடன் செயல்படுத்திட வேண்டும்.

நமது வளாகத்திலுள்ளோர் அனைவரையும் அனைத்து விலங்கினங்கள் ஜீவராசிகளையும் காத்து ரட்சிக்கும் ஸ்ரீ அமர் விநாயகர் கோவிலில் வருஷாபிஷேகம் - 02-02-2021 அன்று எளிய முறையில் நடைபெற்றது.

கனடா Handi Care International அமைப்பும், அதன் தலைவர் திருமதி.சுலோசனா கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எடுத்துக்கொண்ட முன்முயற்சிகளாலும், வழங்கிய நல்ஒத்துழைப்பினாலும் சென்னையில் பிப்ரவரி 2020-ல் நடைபெற்ற Early Intervention International Conference சங்கத்தின் 40 ஆண்டுகால வரலாற்றில் மிக முக்கிய நிகழ்வு என்று சொன்னால் அது மிகையாகாது. அமர் சேவா சங்கத்தின் வளர்ச்சியில் 1992-லிருந்து கடந்த 29 ஆண்டுகளாக வளர்ச்சிக்குப் பாடுபட்டு வருவதற்கு நாம் தலைவணங்கி நன்றியினை சமர்பிப்போமாக. EII Conference-ன் போதும் அதற்கு முன்பும் தொடர்ந்து தற்போதும் டாக்டர்.தினேஷ் கிருஷ்ணமூர்த்தி, உள்நாடு, வெளிநாடுகளில் நமது வளர்ச்சி பாதைக்கு வழிகோலும் விவாதங்களில் தொடர்ச்சியாக Zoom Meeting-ல் பங்கேற்று வருவதும் Ms.மேரி பிரேம் Online-ல் வகுப்புகள் நடத்தி ஆலோசனை வழங்கி வருவதும் நமக்கு பேருதவியாக உள்ளன இவர்களுக்கு நமது பாராட்டுகளை உரிதாக்குவோமாக. EII Conference-ல் இவர்கள் இருவரின் பங்கு மகத்தானது. இந்நிகழ்வு வெற்றிபெற நமது கமிட்டி உறுப்பினர்கள், பணிபுரியும் அன்பர்கள், தன்னார்வத் தொண்டர்கள், Paper Presentation செய்தவர், விழாவில் பங்கேற்ற முக்கிய விருந்தினர்கள், விளம்பரதாரர் அனைவருக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்வோமாக.

EI விஷயமாக Online-ல் கலந்துரையாடல் செய்வதால் நமது Global வளர்ச்சி நல்லபடியாகயிருக்கிறது. செயலர் திரு.எஸ்.சங்கரராமன் தலைமையில் அவ்வப்பொழுது இரவு, பகல் பாராமல் திருவாளர்கள்.S.ராஜேஸ்வரன், M.சங்கர் சகாயராஜ், P.ராமசுப்ரமணியன், S.அரவிந்த், V.நவமணி, மற்றும் T.பரமகல்யாணி, ஆகியோர் செயலருடன் இணைந்து பணி செய்து நமது EI Project-ஐ முன் எடுத்துச் சென்று கொண்டியிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

APPI, GCC, Oracle, Omcharity, Kalraman, HCL, SCB, போன்ற நிறுவனங்களிலிருந்து நமது Project-களுக்கு நிதிஒதுக்கீடு செய்வதால் நமது செயல்பாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அவற்றிற்கு நாம் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம்.

GRT Thangamaligai நிதியுதவியுடன் கட்டப்பட்ட MTU விரிவாக்க கட்டிடத்திற்கான திறப்பு விழா 21-11-2020 அன்று நடைபெற்றது நாம் அறிந்ததே. தற்போது அவ்விடத்தில் பிசியோதெரபி பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அதன்

முதல்மாடி Training Hall கட்டுவதற்கு 22-8-2021 அன்று பூஜைப் போடப்பட்டது என்ற நல்ல செய்தியையும் பகிர்ந்து கொள்கிறோம்.

பாகவதர் சூடாமணி பிரம்மஸ்ரீ பாபநாசம் திரு.R.ரமணி அவர்களின் தலைமையில் 15 பாகவதர்கள் சங்கத்திற்கு 5, 6 மார்ச் 2021 அன்று வருகை தந்து 'ஸ்ரீராதா கல்யாணம்' வைபவத்தினை மிகச் சிறப்பாக நடத்திகொடுத்து குழந்தைகளையும், நம்மையும் ஆசீர்வதித்தார்கள்.

Foster Care Inauguation Function 22-4-2021 அன்று திறப்பு விழா நடைபெற்றது. கட்டட பணிகள் முடிந்தவுடன் 07-06-2021 முதல் நான்கு பயனாளிகள் தங்கியிருந்து பயன்பெற்று வருகின்றனர்.

18-40 வயதிற்குட்பட்டவர்களுக்கு C-19 தடுப்பூசி முகாம் நமது சங்கத்தில் டாக்டர் G.S.சமீரன் அவர்களின் தலைமையில் 25-5-2021 அன்று நடைபெற்றது. அதில் டாக்டர்.K.முருகையா அவர்கள், இலத்தூர் பிரைமரி ஹெல்த் சென்டர் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். சுமார் 35 நபர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டது. இரண்டாவது தடுப்பூசி முகாம் 17-8-2021 அன்று நடைபெற்றது. சுமார் 25 நபர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

27-07-21 Compound wall 168m மற்றும் 35m பூமி பூஜை, 22-8-2021 Compound wall 65m and Kambli land Rehab Orchard well reclamation பூமி பூஜை, 26-8-2021 MG block rest room பால் காய்ச்சும் நிகழ்ச்சி ஆகியவை நடைபெற்றன.

RPSNC – குழந்தைகள் தங்குவதற்கு புதிய கட்டிட பணிகள் நிறைவுபெறும் தருவாயில் உள்ளது. 2021 அக்டோபர் மாத பால் காய்ச்சும் வைபவம் நடைபெறும்

Solar, Gobar Gas, Foster Care, Rotary International Project ஆகியவற்றில் நமது கமிட்டி உறுப்பினர் திரு.P.S.கஸ்தூரி ரெங்கன் அவர்கள் முழுகவனம் செலுத்தி வந்தார். சமீபத்தில் அவருக்கு Major Surgery நடந்தது. அவரது துணைவியாரும் கடந்த 2 ½ வருடமாக சிகிச்சையில் இருந்து வருகிறார்.

C-19-னால் Note Book விற்பனை சரியாக இல்லாத காரணத்தால் Seshashayee Paper நிறுவனத்தாரிடம் பேப்பர் நன்கொடை இந்த வருடம் பெறமுடியவில்லை.

செயலாளர் திரு.S.சங்கரராமன் மற்றும் அவரது துணைவியார் திருமதி.ரமணி சங்கரராமன் இருவரும் தொடர்ந்து பங்கேற்று வந்த மும்பை, சென்னை, பெங்களூர் மாரத்தான் நிகழ்ச்சி, சென்னை, தமிழ்நாடு மாற்றுத்திறளாளிகளின் கூட்டமைப்பு அறக்கட்டளை சார்பாக மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு போட்டி, பணியாளர்களின் ஆண்டுவிழா, உலக மாற்றுத்திறனாளிகள் தின விழா, பள்ளி ஆண்டு விழா, DYTs, PAC Get-together விழா போன்றவை C-19 காரணமாக இந்த வருடம் நடைபெறவில்லை.

பட்டுகோட்டையில் சங்கத்தின் well wisher திரு.M.S.ராஜேந்திரன் மிராசு 2 Ground (சுமார் 11 செண்ட்) காலிமனையை சங்கத்திற்கு நன்கொடையாக 04.07.2018 அன்று வழங்கியுள்ளார். விரைவில் நமது VBRI EI பணிகள் அப்பகுதியில் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதற்கான முழுமுயற்சிகளை விரைவில் தொடங்கவேண்டும்.

ராஜபாளையம், ராம்கோ சிமிண்ட் நிறுவனம் நம்முடைய கட்டட வேலைக்காக 7000 மூடை சிமிண்ட் நன்கொடையாக வழங்கியது. நமது பள்ளி கட்டுமான பணி (Phase 3 & 4), Compound wall, PAC-Roof tiles, Toilet Renovation, RPSNC building, Kambli Store Room மற்றும் MG block toilet போன்ற பணிகளுக்கு அவற்றை பயன்படுத்தி உள்ளோம். தொடர்ந்து கட்டட பணிகள்யிருப்பதால் மீண்டும் ராம்கோ நிறுவனத்திடம் சிமிண்ட் நன்கொடையாக கேட்கவேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

Note Book விற்பனை C-19-னால் சரியாக இல்லாத காரணத்தால் Seshashayee Paper நிறுவனத்தாரிடம் பேப்பர் நன்கொடை இந்த வருடம் பெறமுடியவில்லை.

இரண்டு வருடங்கள் கழித்து சென்னையிலிருந்து Dr.மாலதி ரமணி அவர்கள் வருகைபுரிந்து 11-9-2021 அன்று திருநெல்வேலியில் வைத்து நடைபெற்ற மருத்துவ முகாமில் மருத்துவ ஆலோசகராக பங்கேற்றுவிட்டு சென்றார்கள்.

பணியாளர்களுக்கு அவர்களுடைய திறன்களில் மேன்மையடைய அவ்வப்பொழுது பயிற்சிகள் சங்க வளாகத்திலும், வெளி இடங்களில் கொடுக்கப்பட்டு வந்தது. தற்போது C-19-னால் பயிற்சிகள் நடத்தமுடியாமல் உள்ளதால் பணியாளர்கள் Webinar attend செய்து வருகிறார்கள்.

Readers Club of Virudhunagar, Rotary Club of Virudhunagar, Idhayam, Tamerica TV, 1234 Foundation, Trainer திரு.M.ஹரிஹரமகா தேவன் மற்றும் அமர் சேவா சங்கம் ஆகியோர் இணைந்து 2021 ஜுலை மாதம் முதல் ஒவ்வொரு சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு Jc.M..ஹரிஹரமகா தேவன் நடத்தும் Live with Bliss and Peace நேரலை நிகழ்ச்சியில் சங்கத்தில் பணிபுரியும் அன்பர்களுடன் அடியேனும் கலந்துக்கொண்டு பயன்பெறுகிறோம்.

EI Training programme 08-02-2021 to 14-02-2021 வரை நடைபெற்றது. Dr.நந்திதா Trainer-ஆக கலந்துகொண்டார்.

சாம்பவர்வடகரை பேரூராட்சிக்கு உட்பட்ட கம்பிளி-விந்தன்கோட்டை ரோடு, இண்ட்ராயல் கம்பெனி அருகில் பம்புசெட், கிணறுடன் கூடிய சுமார் 16.34 ஏக்கர் புன்செய் நிலம் சங்கத்தின் விரிவாக்க திட்டங்களுக்காக வாங்கப்பட்டுள்ளது. இவற்றின் மதிப்பு Rs.1 கோடி 90 Lakhs ஆகும். தற்சமயம் சொட்டுநீர் பாசனம் மூலம் நெல்லி தோப்பு பராமரிக்கப்பட்டு வருகிறது. Rehab Orchard என்ற திட்டம் 15-8-2021 அன்று உருவாக்கப்பட்டு புதியதாக சுமார் 600 நெல்லி மரக்கன்று, பல்வேறு

வகையான பழ மரக்கன்றுகளும் நடுவதற்கான வேலைகள் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. செயலர் சங்கரராமன் அவர்களின் சகோதரியும், முன்னாள் கமிட்டி உறுப்பினருமான பேராசிரியர் Late.Dr.S.சுமதி அவர்களின் பிறந்த தினமான 11-9-2021 அன்று அவர்களின் தாயார் திருமதி.தைலாம்பாள் ஸ்ரீனிவாசன் அவர்கள் Rehab Orchard விஜயம் செய்து மரக்கன்றுகள் நட்டு Rs.11111/- நன்கொடை வழங்கி ஆசிர்வதித்தார்கள்.

44 செண்ட் இடம் சங்கத்தின் எல்கையில் வடமேற்க்கு பகுதியில் புதியதாக வாங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மாற்றுத்திறன் படைத்த பணியாளர்களுக்கு Quarters கட்டும் பணிக்கு அவ்விடம் பயனுள்ளதாக அமையும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

மே 2020 முதல் Solar System மூலம் மாதம் ஒன்றுக்கு 80 கிலோ வாட் வரை மின்சாரம் உற்பத்தி செய்து நமது அன்றாட தேவையை பூர்த்தி செய்து வருகிறோம். இதன்மூலம் நமது மின்கட்டணத்தின் செலவு பாதி குறைந்துள்ளது. மேலும் இத்திட்டத்தை விரிவுப்படுத்தி இன்னும் 60கிலோ வாட் மின்உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அமர் சேவா Global Association என்ற கம்பெனி 09-11-2020 அன்று கம்பெனி சட்டம் Section 8-ன் கீழ் புதியதாக உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இவற்றின் நிர்வாக உறுப்பினர்களாக திரு.எஸ்.ராமகிருஷ்ணன், திரு.எஸ்.சங்கரராமன், திரு.T.V.சுப்ரமணியன் மற்றும் செல்வி.S.பத்மாவதி ஆகியோர் முக்கிய அங்கம் வகிக்கிறார்கள். நமது m-VBRI Application-னின் IP License Sale செய்யும் வணிக வளர்ச்சி நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை தாங்கள் அறிவீர்கள்.

சுலோசனா கார்டன்ஸ் வளாகம், விந்தன்கோட்டை வளாகம் மற்றும் கொடிக்குறிச்சி வளாகத்தில் வருகிற 10 ஆண்டுகளில் கட்டப்பட வேண்டிய பல்வேறு கட்டடங்கள் குறித்த Master Plan மற்றும் Project Proposal தயார் செய்வதற்கு நமது நலம்விரும்பி திரு.K.ராமலிங்கம் சென்னை அவர்கள் அறிமுகத்தின்பேரில் M/s.C.R.Narayana Rao (Consultants) Pvt.Ltd., Mylapore, Chennai நிறுவனத்தை அனுகி நான்கு சுற்று கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 31-3-2023-க்குள்ளாவது Master Plan தயாரிப்புப் பணி நிறைவடைய வேண்டும்.

**விருதுகள்**

Our film S.Sankara Raman-The Man, The Myth, The Legend' has selected at RARAS-1st International Competition Rare Phootography and short films online, Spain.

சென்னை, Rotary Club of Guindy (No.30511, RI.Dt.3232) தலைவர் திரு.எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களுக்கு "Paropakaari Award" 27-1-2021 அன்று வழங்கி கௌரவித்தது.

மகளிர் தினத்தை முன்னிட்டு கனடா Handi Care International தலைவர் திருமதி.சுலோசனா கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய தன்னார்வத் தொண்டினைப் பாராட்டி 08-03-2021 அன்று "Women Achiever 2021" என்ற விருது கனடா அரசாங்கம் வழங்கி கௌரவித்தது.

CIF Canada India Healthcare Innovation Awards 2021 நமது EI consultant Project Director திரு.தினேஷ் கிருஷ்ணா அவர்களுக்கு சுகாதார துறையில் பூர்த்தி செய்யப்படாத தேவையை நிவர்த்தி செய்ய மற்றும் அவர்களின் தொழில்முனைவோர் வளர்ச்சி அவர்களின் அடுத்த கட்ட உதவி போன்ற பணியைப் பாராட்டி 2021 May 21 மற்றும் 22 ஆகிய தேதிகளில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டது.

Rotary's International Dist.3142-ன் வருட மாநாடை முன்னிட்டு Service Above Self என்ற விருது 20-6-2021 அன்று தலைவர் திரு.எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

மாற்றுத்திறனாளிகள் நலன் விரும்பும் தேசிய அமைப்பு நிறுவனமான மதுரை Saksham அமர் சேவா சங்கத்திற்கு Saksham Sadhana என்ற விருதினை 17-9-2021 அன்று வழங்கி கௌரவித்தது. அமர் சேவா சங்கத்தின் சார்பாக இவ்விருதை திரு.அரவிந்த பரத்வாஜ் பெற்றுவந்தார்.

15-6-2021 அன்று அமர் சேவா சங்கம் 40-வது ஆண்டுகள் நிறைவடைந்தன C-19 காரணமாக விழா நடத்துவது, சிறப்பு மலர் வெளியிடுவது, முக்கியமானவர்கள் கௌரவிக்கப்படுவது போன்ற பணிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. அடுத்த தலைமுறையினர் சங்கப் பொறுப்புகளை நிர்வகிக்க ஆலோசனைகள், கருத்து பரிமாற்றங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

Early Intervention-ல் (0-6 வயது வரம்பு) ஆரம்பித்து பள்ளி பருவம், கல்லூரி பருவம், வருவாய் ஈட்டும் மற்றும் குடும்பத்தை நிர்வகிக்கும் பருவம், முதுமை பருவம் என மாற்றுத் திறனாளிகளின் நலனில் எவ்வாறு அக்கறை செலுத்த வேண்டும், இதில் அமர் சேவா சங்கத்தின் பங்கு என்ன? மாநில, மத்திய அரசின் பங்கு என்ன? மாவட்ட நிர்வாகம் மற்றும் பஞ்சாயத்துகளின் பங்கு என்ன? பொது மக்கள், வேலை வாய்ப்பு அளிக்கும் நிறுவனங்கள், கல்வி மற்றும் போக்குவரத்து நிறுவனங்கள் போன்ற

அமைப்புகளின் பங்கு என்ன? என்பனபற்றியெல்லாம் கருத்துக்கணிப்பு நடத்தப்படவேண்டும்.

Covid-19 Lockdown-ல் சில பணியாளர்களுக்கு வருமானம் இழப்பு ஏற்பட்டுள்ளது அதற்காக வருந்துகிறோம். வருகிற ஆண்டில் நிலைமை விரைவில் சீரடைந்து சுகாதாரமாகவும், அமைதிகாப்பதாகவும், நன்மைப்பயப்பதாகவும் அமைய ஆண்டவனை வேண்டுவோமாக. நமக்கு சுய பாதுகாப்பு மிக மிக அவசியம் என்பதை உலகத்தில் உள்ள ஒவ்வொரு அன்பர்களும் உணரவேண்டும். அதற்கு ஏற்ற விதிமுறைகளை நாம் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். அச்சம் கொள்ள தேவையில்லை ஆனால் அறிவு பூர்வமாக செயல்படவேண்டும்

**இரங்கல் செய்தி**

புதுச்சேரி திரு.A.ராமசாமி 30-03-2021 அன்றும் நகைச்சுவை நடிகர் திரு.விவேக் அவர்கள் 17-04-2021 அன்றும் திரு.ஜோசப் அவர்களின் தாயார் 23-04-2021 அன்றும் இவரின் தந்தையார் 28-04-2021 அன்றும் தேனீ சித்பவனந்தா ஆசிரமம் HH ஸ்ரீஓம்காரனந்தா சுவாமிகள் 10-5-2021 அன்றும் நமது அறிவுரைக்குழு உறுப்பினர், நன்கொடையாளர் மற்றும் நலம்விரும்பியுமான பெங்களூர் திரு.S.நாராயணன் 17-06-2021 அன்றும் சென்னை, வேளச்சேரி சங்கீத குருகுலம் மாமியின் கணவர் Advant Garde Engg & Consultants நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் போரூர் திரு.G.V.ராமன் அவர்கள் 24-07-2021 அன்றும் பெங்களூர் திருமதி.மீனா வெங்கடாசலம் 02-08-2021 அன்றும், கோயம்புத்தூர் திரு.ராமகிருஷ்ணன் 29-07-2021 அன்றும் நமது நெடுநாளைய நலம்விரும்பியும், நன்கொடையாளருமான திருநெல்வேலி திருமதி.M.D.கண்ணா மாமி அவர்கள் 04-08-2021 அன்றும் விசாகப்பட்டினம் நமது நன்கொடையாளரும், நலம் விரும்பியுமான திரு.PKA.நாராயன் அவர்கள் 17-08-2021 அன்றும் நமது நிர்வாகக்குழு உறுப்பினர் திரு.T.V.சுப்ரமணியன் அவர்களின் தாயார் திருமதி சாரதா சுப்புலெட்சுமி 20-8-2021 அன்றும் இறைவனது திருவடி சேர்ந்தார்கள் என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நிர்வாகக் குழு, பொதுக்குழு மற்றும் அறிவுரைக்குழு உறுப்பினர்கள் சங்கத்திற்கு முழு ஒத்துழைப்பை நல்கி வருகிறார்கள். கடந்த 40 ஆண்டுகளில் சங்கத்தில் நடைபெற்ற நல்ல காரியங்களுக்கான பெருமை முன்னாள் மற்றும் தற்போதுள்ள 29 அன்பர்களைக் கொண்டஅறிவுரைக்குழு, 26 பேரைக் கொண்ட பொதுக்குழு, 11 உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழு, அயராது அல்லும் பகலும் பணிபுரிந்த, பணிபுரிந்து வருகின்ற அன்பர்களையும், தன்னார்வத் தொண்டர்களையும், அறிவுரை, ஆலோசனைகள் வழங்கி நம்மோடு இணைந்து செயல்பட்டு வரும் நிறுவனங்களையும், நலம்விரும்பிகளையும், நன்கொடையாளர்களையும், பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி அன்பர்களையுமே சாரும். எல்லாவற்றிற்கும் மேலாக பகவானுடைய பரிபூரண அனுக்ரஹம் நமக்கு எப்பொழுதும் இருந்து வருகிறது.

நமது செயல்பாடுகள் சங்கத்திற்கு விஜயம் செய்யும் பல நல்ல உள்ளங்களாலும், நமது website-ஐ பார்வையிடும் சகோதர, சகோதரிகளாலும், பத்திரிகைகள்,

தொலைகாட்சிகள் போன்றவற்றில் நமது நிகழ்வுகளைக் காணும் அன்பர்களாலும் வெகுவாகப் பாராட்டப்படுகின்றது. செயலர், CSR Cell மக்கள் தொடர்பு பிரிவு மற்றும் The Amar Foundation நமது சங்கத்தின் நிதிநிலையை உயர்த்துவதில் காட்டும் விடாமுயற்சி, மேற்கொள்ளும் பல்வேறு திட்டங்கள் பல சமூக சேவை நிறுவனங்களுக்கும் வழிகாட்டியாக அமைகிறது.

பல நல்லிதயம் கொண்ட பெரியோர்களின் ஆசிகளாலும், ஆதரவினாலும், பல உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள், தொழிலதிபர்கள், தனிநபர்கள் நன்கொடையாலும், உறுப்பினர்கள், பணியாளர்களின் இடைவிடாத உழைப்பினாலும் சங்கம் மேலும் பல சாதனைகளைப் படைக்கவும், சவால்விடப்பட்ட சகோதர, சகோதரிகளின் வாழ்க்கைத்தரம் மேம்படவும், சங்கப்பணியாளர்கள், நமது சேவையைப் பயன்படுத்திக் கொள்வோர், தன்னார்வத் தொண்டர்கள், உறுப்பினர்கள், நன்கொடையாளர்கள், நன்கொடை திரட்டி உதவுபவர்கள், இப்பகுதிவாழ் பொதுமக்கள் மற்றும் அனைவரும் தேக ஆரோக்கியத்தோடு, வளமான வாழ்வு பெறவும் எல்லாம் வல்ல இறைவனை வணங்கி பிரார்த்தித்துக் கொள்கிறோம். நமக்கெல்லாம் நல்லெண்ணங்களையும், தொலைநோக்குப் பார்வையினையும், திறமையினையும், குறிப்பாக தொண்டுள்ளத்தையும் மேன்மேலும் வழங்கி **Live To Serve** என்ற நமது வாசகத்தை, கொள்கையை அர்த்தமுள்ளதாக்க ஆண்டவன் என்றும் அருள்பாலிப்பாராக!!

நன்றி.

என்றும் இறைபணியில்,

எஸ்.ராமகிருஷ்ணன்
தலைவர்.

இடம்: ஆய்க்குடி.
நாள்: 23-09-2021.